DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 67/2022**

Deposition of Witness: PW2.

| | | | |
|---|---|---|---|
| Name | ஜெயபிரியா | Husband Name – ராஜசேகரன் | |
| Age | 48 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026.

**வாதி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி**

1908 ம் வருட வீரியபெருமாள் நாடாருக்கு ஆறுமுக நாடார் எழுதிக்கொடுத்த ஒத்திப்பத்திரம் வா.சா.ஆ.23 ஆகும், வாதிக்கு தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் 19.12.2019 ம் தேதி கொடுத்த பதில் கடிதம் நகல் வா.சா.ஆ.24 ஆகும்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தும் வாதியாகிய எனது கணவருக்கு தெரியுமா என்றால் தெரியும். கதவு எண்.34 என்ற வீட்டில் நான் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் 30 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் 30 வருடங்களாக அந்த பகுதியில் குடியிருந்து வருவதால் எனக்கு அந்த பகுதியை குறித்து நன்கு தெரியும் என்றால் சரிதான். எனது வீட்டின் தலைவாசல் நடுத்தெருவில் தெற்கு நோக்கி உள்ளது என்றால் சரிதான், கிழக்கு பகுதியில் ஒரு ஜன்னல் உள்ளது. எனது வீட்டிற்கு மேற்கே உள்ள S.V.K.கருணாகரனின் வீட்டின் தலைவாசல் மேற்கு நோக்கி உள்ளது என்றால் தற்போது மேற்கு நோக்கி உள்ளது. எனது வீட்டிற்கு வடக்கே உள்ள காசிமணியம்மாள் மற்றும் இளங்கோ (பிரதிவாதிகள்) வீட்டின் தலைவாசல் மேற்கு நோக்கி உள்ளது என்றால் சரிதான், கிழக்கில் அவர்களுக்கு பாதை உள்ளது அதிலும் ஒரு வாசல் வைத்துள்ளார்கள்.

2. எனது வீட்டின் கிழக்கில் உள்ள ஜன்னலும், பிரதிவாதிகளின் கிழக்கு பக்கமுள்ள

வாசலும் எனது வீட்டின் கிழக்கு பக்கமுள்ள சிமெண்ட் சந்தில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.265 மற்றும் 268ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு அதை பற்றி சரியாக தெரியாது. சர்வே எண்.265 மற்றும் 268 ல் யார் யார் வீடுகள் உள்ளது என்றால் சர்வே எண்.265/1ல் எங்கள் வீட்டின் பாதி நிலம் உள்ளது, சர்வே எண்.265/1ல் 700 சதுரடி நிலத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள், சர்வே எண்.268/1ல் பிரதிவாதிகள் உள்ளார்கள், சர்வே எண்.268/2ல் நாங்கள் பாதி அனுபவித்து வருகிறோம், சர்வே எண்.268/2லும் பிரதிவாதிகள் ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளார்கள்.

3. சர்வே எண்.265/2ல் நாராயணநாடார் மகன் தங்கவேல் வசம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி தங்கவேல் என்பவரை சாட்சியாக விசாரணை செய்ய தயாராக உள்ளேனா என்றால் தங்கவேல் தற்போது உயிருடன் இல்லை, அவருடைய மகன் பார்த்தசாரதி உயிருடன் உள்ளார், ஆனால் பார்த்தசாரதிக்கு 75 வயதாகிவிட்டது, நாங்கள் விசாரிக்க தயாராக உள்ளோம். சர்வே எண்.268/3ல் குடியிருக்கும் கருணாகரன் மனைவி கனகரத்தினம் என்பவரை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளோமா என்றால் கனகரத்தினம் பிரதிவாதிகளுக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவரை விசாரணை செய்ய தயாராக இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது கணவருக்கு இரண்டு பட்டாக்கள் கிடைத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 12.09.1988ம் ஆண்டு எனது கணவருக்கு S.S.K.சௌந்தரராஜன் அவர்கள் 662 சதுரடி நிலத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.265/1க்கு பட்டா ஏற்பட்டது என்று நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பட்டா எப்போது எப்படி ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 662 சதுரடி நிலத்திற்கு பட்டா நாங்கள் வாங்கவே இல்லை என்றும் அப்படி வாங்கியிருந்தால் நாங்கள் அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல, பட்டா வாங்கினோம் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். 2018ம் வருடம் தான் எனது கணவருக்கு பாத்தியப்பட்ட நிலத்தை அளவீடு செய்தார்கள் என்றால் சரிதான், 1988ம் ஆண்டு எனது கணவர் கிரையம் பெற்ற பின்பு 2018ம் ஆண்டு தான் நாங்கள் கிரையம் வாங்கிய சொத்தை அளந்தார்கள். 2018ம் வருடத்திற்கு முன்பு எனது கணவர் கிரையம்

வாங்கிய சொத்தை அளவீடு செய்யாமல் தான் பட்டா வழங்கினார்கள் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 2வது பக்கம் 5வது வரியில் சுமார் 150 வருடம் பழமையான காரைக்கட்டிடம் மற்றும் தகர மனையில் இருந்து 265 மற்றும் 268ன் தெற்கு பக்கம் உள்ள கிழமேல் கைமுழம் 40 தென்வடல் கைமுழம் 16 உள்ள இடத்தை கிரையம் செய்து விடுகின்றனர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிழமேல் 40 கைமுழம் (60 அடி நீளம்) உள்ள மண்சுவற்றின் உயரம் எவ்வளவு உள்ளது என்றால் சுமார் 9 அடி இருக்கும். மேற்படி 60 அடி நீளம் கொண்ட கிழமேல் சுவர் ஒரே நேர்கோட்டில் உள்ளதா என்றால் நேர்கோட்டில் இல்லை. மேற்படி மண்சுவற்றில் தற்போது தகரம் இருக்கிறதா என்றால் தற்போதும் அங்கு தகரம் உள்ளது. எனது நிரூபண வாக்குமூலத்தில் பக்கம் எண்.5ல் 2வது பத்தியில் மேற்படி வீட்டின் வடக்கு பக்கம் தகரத்திலிருந்து விழும் மழைநீர் கடத்துவதற்கான சந்து பகுதியாகும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சந்தின் அகலம் 3 அடி இருக்கும் என்றால் 1–1/2 அடி இருக்கும் என்று சாட்சி முதலில் சாட்சியம் அளித்துவிட்டு தற்போது நான் பிரதிவாதி வீட்டிற்குள் சென்றதில்லை என்றும், அதனால் எனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளிக்கிறார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.11 புகைப்படங்களில் உள்ள சுவர் தான் மதில்சுவர் என்றால் சரிதான். மேற்படி மதில் சுவர் முழுவதும் தகரம் உள்ளதா என்றால் தகரம் உள்ளது. மேற்படி மதில் சுவர் எந்த இடத்திலும் கோணலாக இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. மேற்படி மதில் சுவற்றில் ஜன்னல் எதுவும் இல்லை என்றால் ஜன்னல் இருந்தது தற்போது தான் இல்லை. வா.சா.ஆ.11 புகைப்படங்களில் எந்த இடத்தில் மதில் சுவர் கோணலாக இருக்கிறது என்றால் வா.சா.ஆ.11 புகைப்படத்தில் உள்ள நீளத்தை விட மதில் சுவர் நீளமாக இருக்கும் அந்த இடத்தில் தான் கோணலாக இருக்கும். மேற்படி மண்சுவர் கிழக்கு புறம் உள்ள நிலத்தை தான் நாங்கள் கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி மண்சுவற்றிக்கு மேற்குபுறம் உள்ள வீட்டில் கனகரத்தினம் என்பவர் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எங்களது வீட்டிற்கும் கனகரத்தினத்தின் வீட்டிற்கும் நடுவில் மேற்படி மண்சுவரும் தகரமும் ஒரே சேர்க்கையாக பழமையாக இருந்ததுபோல் தான் தற்போதும் உள்ளது என்றால் சரிதான். மண்சுவர் இடிந்துவிழுகிறது என்பதற்காக நான் வாடகை வீட்டிற்கு சென்றேனா அல்லது வழக்குரை வீட்டை கிரையம் செய்து கொடுப்பதற்காக

காலி செய்து கொடுத்தேனா என்றால் மண்சுவர் இடிந்து விழுந்ததால் பாதுகாப்பு கருதி வாடகை வீட்டிற்கு சென்றோம். வா.சா.ஆ.14 கிரைய பத்திரத்தில் எங்கள் வீட்டின் வடக்குபுற மண்சுவரானது எங்கள் வீட்டிற்கும் பிரதிவாதிகள் வீட்டிற்கும் பொதுவாக பாத்தியப்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் பிரதிவாதியின் தந்தை எங்களை ஏமாற்றி அவ்வாறு எழுதிவிட்டார். நாங்கள் வாங்கிய வா.சா.ஆ.14 கிரைய பத்திரத்தில் வடக்கு மற்றும் மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு பொதுச்சுவர் பாத்தியம் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றும், மேற்படி பொதுச்சுவற்றை அபகரிக்கும் நோக்கத்திலும் பிரதிவாதிகளை மிரட்டும் நோக்கத்திலும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 30 வருடங்களாக பொதுச்சுவற்றின் தெற்கு பக்கம் நாங்களும், வடக்கு பக்கம் பிரதிவாதிகளும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணம் ஏற்படுத்திக்கொண்ட விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2012 ம் ஆண்டு எனது பாட்டி மரணிக்கும் தருவாயில் எங்களிடம் பிரதிவாதிகள் எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை அபகரித்து வைத்துள்ளார்கள் என்று சொல்லிவிட்டு மரணித்தார், 2018 ம் வருடம் பிரதிவாதிகள் வீடு கட்ட முற்பட்டபோது பிரதிவாதிகளிடம் எங்கள் இடத்தை விட்டுவிட்டு வீடு கட்டுமாறு நாங்கள் சொன்னோம் அப்போது தான் பிரதிவாதிகள் வா.சா.ஆ.13 ஆவணத்தை எங்களிடம் காண்பித்தார்கள். 1971 ம் ஆண்டு கிரையம் பெற்ற நிலத்தில் 24.01.1978 ல் கட்டிடம் அனுமதி பெற்று ஒரு சிறிய பகுதியில் வீடு கட்டி அனுபவித்து வந்த விபரம் எனது மாமனார் மாமியாருக்கு நன்கு தெரியும் என்றும், அவர்கள் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவர் 1988 ம் ஆண்டு கிரையம் வாங்கிய பின்புதான் எனது மாமனார் 1994 ம் ஆண்டு இறந்தார் என்றால் எனது மாமனார் 1993 ம் ஆண்டு இறந்தார். எனது மாமனார் 1993 ம் ஆண்டு இறக்கும்வரை எங்கள் வீட்டின் வடக்குபுறம் உள்ள பொதுச்சுவற்றையோ அல்லது பிரதிவாதிகளின் மனையிடத்தையோ இடைஞ்சல் செய்யவில்லை என்றால் சரிதான். 1971 ம் ஆண்டு கிரையம் பெற்ற நிலத்தை 20.01.2016 ம் தேதி ரேணுகா என்ற மகளுக்கு கிழக்குபுறம் உள்ள சுமார் 487 சதுரடி நிலத்தையும், மீதமுள்ள மேற்கு பக்கமுள்ள இடத்தை 27.12.2018 ம் தேதி 2 ம் பிரதிவாதி இளங்கோவிற்கும் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்த விபரம் எனக்கும் எனது கணவருக்கும் நன்கு தெரியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.24 ஆவணத்தின்படி

பிரதிவாதிகளின் 1971 ம் ஆண்டு வாங்கிய கிரையபத்திரத்தையும், 2016 ம் வருடம் ஏற்படுத்திகொண்ட தான பத்திரத்தை பற்றியும், 2018 ம் வருடம் ஏற்படுத்திகொண்ட தான பத்திரம் பற்றியும், 2018 ம் ஆண்டின் எனது கணவருக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை ரத்து செய்ய கோரி எனது கணவர் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் " 1936 ம் ஆண்டு 459 ம் எண், ஆவணம் மூலம் சர்வே எண்.265, 268 ல் கிரையம் செய்தது நீங்கலாக பாக்கி உள்ள சர்வே எண்.265, 268 ல் வடக்குபுறம் உள்ள 997 ¼ சதுரடிகள் தனது தகப்பனார் பரமசிவநாடார் மூலம் பாகமாக கிடைத்த சர்வே எண்.265, 268 ல் கிடைத்த 997 ¼ சதுரடி இடத்திற்கு ராஜசேகரனுக்கு 268/2 என்று பட்டா ஏற்பட்டு" என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1936 ம் ஆண்டு கார்மேகநாடாருக்கு எழுதிக்கொடுத்த 459 எண் கொண்ட கிரைய பத்திரம் மூலம் கார்மேகநாடாருக்கு 1440 சதுரடி கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் கார்மேக நாடாருக்கு சர்வே எண்கள்.265 மற்றும் 268 ல் தெற்கு பக்கம் உள்ள கிழமேல் கைமுழம் 40 தென்வடல் கைமுழம் 16 உள்ள இடத்தை கிரையம் செய்து கொடுத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நிலத்தை S.S.குழந்தைவேல் நாடாருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி S.S.குழந்தைவேல் நாடாரின் மகன் S.S.K.சௌந்தரராஜனிடம் இருந்து தான் எனது கணவர் 662 சதுரடி நிலத்தை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். எனது கணவர் கிரையம் பெற்ற 662 சதுரடி நிலத்தை தவிர்த்து மீதுமுள்ள நிலத்தில் கனகரத்தினம் அம்மாள் கிரையம் வாங்கி குடியிருக்கிறார் என்றால் சரிதான். சர்வே எண்.268/3 ல் உள்ள நிலத்தில் தான் S.V.K.கருணாகரன் மனைவி கனகரத்தினம் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். சர்வே எண்.265 மற்றும் 268 ல் கார்மேக நாடாருக்கு ஆவண எண்.459/1936 மூலம் விற்பனை செய்த 1440 சதுரடி நீங்கலாக 997-1/4 சதுரடி பாக்கி இருந்தது என்பதை நிரூபணம் செய்ய ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் 2020 ம் ஆண்டு எங்கள் கணவர் பெயரில் 997-1/4 சதுரடி நிலத்திற்கு பத்திரம் ஏற்படுத்திக்கொண்டு அதை வைத்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது கணவர் பெயரில் ஏற்படுத்தப்பட்ட ஆவண எண்.4022/2020 க்கு மூல ஆவணமே ஆவண எண்.459/1936 தான் என்றால்

சரியல்ல. நாங்கள் ஆவண எண்.459/1936 என்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே மறைத்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் ஆவண எண்.459/1936 என்ற ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளோமா என்றால் எனது கணவரிடம் தான் கேட்க வேண்டும்.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.02.10 17:30:16 +0530

District Munsif,
Bodinayakanur.